FORB Learning Platform

# எழுத்துப்பிரதி: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் உள்ளடக்கங்கள்- பெற்றோர் மற்றும் பிள்ளைகள்

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 18 ஆனது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பில் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு காணப்படுகின்ற குறிப்பிட்ட உரிமைகளை குறிப்பிடுகிறது.

தங்களது நம்பிக்கைகளுக்கு அமைவாக தங்களுடைய பிள்ளைகளுக்கு மத மற்றும் ஒழுக்கக் கல்வியினை அளிப்பதற்கும், தங்களது குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்குமான உரிமை பெற்றோர்களுக்கும் சட்டப் பாதுகாவலர்களுக்கும் காணப்படுகின்றது.

ஆனால், மனித உரிமைகள் என்பது பெரியவர்களுக்கானது மட்டுமல்ல! பிள்ளைகளுக்கும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய உரிமை உண்டு – உதாரணமாக, மத அல்லது நம்பிக்கை சமுதாய வாழ்க்கையின் பகுதியொன்றாக இருப்பதற்கும் மத விழாக்கள் அல்லது வழிபாடுகளில் பங்கேற்பதற்கும் உரிமை உண்டு.

பெற்றோரின் அல்லது பாதுகாவலர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மதக் கல்வியை அணுகவும் பிள்ளைகளுக்கு உரிமை உண்டு. பெற்றோரின் விருப்பத்திற்கு எதிராக ஒப்புதல் மத போதனைகளில் பங்கேற்குமாறு அவர்கள் கட்டாயப்படுத்தப்படமுடியாது. அத்துடன், பிள்ளைகள் முதிர்ச்சியடைகின்றதற்கமைய, அவர்களின் சொந்த விருப்பங்கள் அதிக அளவில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

இந்த உரிமைகள் மீறப்பட்டதற்கு நிறைய உதாரணங்களும் உள்ளன. மத்திய ஆசியாவின் நாடுகளில், கடந்தகால சோவியட்டின் மரபுரிமையின் பகுதியொன்றாகக் காணப்படுகின்ற விடயம் யாதெனில், அரசாங்கங்கள் சமூகத்தின் ஒவ்வொரு அம்சத்தினையும் கட்டுப்படுத்த விரும்புகின்றமையே ஆகும். உதாரணமாக, தஜிகிஸ்தானில் 18 வயதிற்குட்பட்டவர்கள் இறுதிச் சடங்குகளைத் தவிர் வேறு மத வழிபாடு அல்லது நிகழ்வுகளில் பங்கேற்பதை சட்டப்பூர்வமாக தடைசெய்துள்ளனர். அத்துடன், ஏனைய மத்திய ஆசிய நாடுகளில் மசூதிகள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களில் கலந்துகொள்ளும், அல்லது கோடைக்கால முகாம்கள் போன்ற செயல்களில் பங்கேற்கும் பள்ளி வயது பிள்ளைகளை அரசாங்கங்கள் விசாரித்து துன்புறுத்தியுள்ள அதேவேளை பள்ளிகளில் பகிரங்க கண்டனங்களுக்கும் உட்படுத்துகின்றன.

எனவே, சில அரசாங்கங்கள் பிள்ளைகள் மதத்தை நடைமுறைப்படுத்துவதனைத் தடுக்கின்றன. வேறு சில அரசாங்கங்கள் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த பிள்ளைகளை பெரும்பான்மை மதத்திற்கு மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட மத போதனைகளில் பங்கேற்குமாறு கட்டாயப்படுத்துகின்றன. கோட்பாட்டில் மட்டுமல்ல, நடைமுறையிலும் பிள்ளைகளுக்கு ஒப்புதல் மத போதனைகளிலிருந்து விலக்கு அளிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்த வேண்டிய கடமை அரசாங்கங்களுக்கு உள்ளது என்ற போதிலும் இது நிகழ்கிறது.

துருக்கியில், சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும், மத கலாசாரம் மற்றும் நெறிமுறைகள் பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களில் ஒப்புதல் மத போதனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. யூத மற்றும் கிறிஸ்தவ மாணவர்கள் கோட்பாட்டளவில் விலக்களிக்கப்பட்டிருப்பினும், நடைமுறையில் இந்த விலக்குகளை கோருவது கடினம் அல்லது சாத்தியமற்றது. அலெவி, பஹாய், நாத்திக அல்லது கடவுள் நம்பிக்கையற்ற குடும்பங்களின் பிள்ளைகள் அல்லது இத்தகைய நம்பிக்கைகளை சுயவிருப்பின்பேரில் தாமாகவே கொண்டுள்ள பிள்கைள் வகுப்புக்களில் பங்கெடுக்குமாறு கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

இவ்வனைத்து உதாரணங்களிலும் பெற்றோர் மற்றும் பிள்ளைகள் ஆகிய இருசாராரினதும் உரிமைகள் மீறப்படுகின்றன.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சமவாயம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பு, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் உண்மையில் சிறுவர்களின் உரிமைகளைப் பற்றி விவாதிக்கவில்லை. குறித்த சமவாயம் அதை மாற்றியதுடன், சிறுவர்களையும் உரிமையுள்ளவர்களாக்கியது. அத்துடன் அதன் உறுப்புரை 14 இல் சிறுவர்களுக்கும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் இருப்பதாக வலியுறுத்துகிறது.

உறுப்புரை 14 ஆனது, சிறுவர்கள் தங்களது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை பிரயோகிக்கையில், விசேடமாக அரசு சார்ந்து அதனை பிரயோகிக்கையில் அவர்களுக்கு பெற்றோருடைய உதவி மற்றும் வழிகாட்டல் தேவைப்படுவதாகக் குறிப்பிடுகின்றதுடன், அவர்களை சுயாதீனமானவர்களாக அதேவேளை இலகுவில் பாதிக்கப்படக்கூடியவர்களாக எடுத்துக் காட்டுகின்றது.

பிள்ளைகளின் சிறப்பு நலன் என்ற கோட்பாடே அனைத்து விடயங்களுக்கும் வழிகாட்டியாய் அமைய வேண்டும் என சமவாயம் கூறுகிறது. இது பிள்ளைகளைப் பாதிக்கும் அனைத்து விடயங்களிலும் பிள்ளைகளின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்குள்ள உரிமையையும் வலியுறுத்துகிறது. எவ்வாறெனினும், பெரும்பாலும் வளர்ந்தவர்களே, குறிப்பாக பெற்றோர்களே இச்சிறப்பு நலன்கள் யாவை என்பது பற்றி ஒரு முடிவுக்கு வருகின்றதுடன், அவர்களுக்காகப் பேசுகிறார்கள்.

இருப்பினும், சில நேரங்களில், பிள்ளைகள் மற்றும் பெற்றோரின் அக்கறைகள் வேறுபட்டிருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய பிள்ளைகளின் உரிமை, பெற்றோரின் அவ் உரிமையுடன் சமநிலைப்படுத்தப்பட வேண்டும்.

உதாரணமாக, மத நடைமுறை அல்லது நம்பிக்கை குறித்து தங்கள் சொந்த முடிவுகளை எடுப்பதற்கான உரிமை பிள்ளைகளின் எவ்வயதில் காணப்படும்? உதாரணமாக அவர்கள் தேவாலயத்திற்கு செல்ல விரும்புகின்றமை தொடர்பான முடிவினை எவ்வயதில் எடுக்க முடியும்?

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின்படி, மதம் அல்லது நம்பிக்கை தொடர்பான விடயங்களில் பெற்றோரின் வழிநடத்துதலானது பிள்ளையின் வளர்ந்து வரும் திறன்களுக்கு இசைவான முறையில் வழங்கப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வயதான மற்றும் முதிர்ச்சியடைந்த பிள்ளைகள் அவர்கள் கொண்டிருக்க வேண்டிய அதிக சுதந்திரத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

வயது வந்தோருக்குரிய சர்வதேச சட்ட நியமமாக 18 வயது அமைந்துள்ளது. ஆனால் பிள்ளைகள் வளர்ச்சியடையும் போது எவ்வளவு சுதந்திரம் மற்றும் மன முதிர்ச்சியினை அடைந்து கொள்கின்றனர் என்ற கேள்வி கலாச்சாரங்களுக்கும் சூழல்களுக்கும் இடையில் பெரிதும் வேறுபடுகிறது. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு சட்டங்களும் விதிமுறைகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, சுவீடனில், 12 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக ஒரு மத சமூகத்தில் உறுப்பினராக்க முடியாது.

பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான சமவாயம், பெற்றோர்கள் பிள்ளைகளை எவ்வாறு வளர்க்கிறார்கள் என்பது குறித்து ஒரு உலகளாவிய நியமத்தினை தாபிக்கின்றது - மதம் அல்லது நம்பிக்கையொன்றின் நடைமுறை ஒரு பிள்ளையின் உடல் அல்லது மன ஆரோக்கியம் அல்லது வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்க கூடாது.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான பெற்றோரின் உரிமைகள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்திற்கு வருவது அரிது. எவ்வாறாயினும், நீதிமன்றமானது, தங்கள் பிள்ளைகளுக்கு இரத்தமாற்றம் செய்வதனைத் தடுப்பதற்கு யெகோவாவின் சாட்சிகளுக்கு காணப்படுகின்ற மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கு எதிராக, பிள்ளைகளின் உயிர் வாழ்கின்ற உரிமைக்கு ஆதரவளித்த வழக்கு இதற்கான ஒரு எடுத்துக்காட்டாகும்.

சுருங்கக்கூறின், இந்த படத்தில் பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பாகப் பார்த்தோம்.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய உரிமை பிள்ளைகளுக்கு உண்டு என்பதுடன் தங்கள் நம்பிக்கைகளுக்கு ஏற்ப தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதற்கான உரிமை பெற்றோர்களுக்கு உண்டு. இது பிள்ளையின் வளர்ந்து வரும் முதிர்ச்சியின் அளவுடன் ஒத்துப்போகும் வகையில் காணப்பட வேண்டும். மேலும், மதம் அல்லது நம்பிக்கையொன்றின் நடைமுறை பிள்ளையின் உடல் அல்லது மன ஆரோக்கியம் அல்லது வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்க கூடாது. உரிமை மீறல்களுக்கான உதாரணங்களில், பிள்ளைகள் மதத்தை பின்பற்றுவதை தடைசெய்யும் அரசுகள் மற்றும் சிறுபான்மை பிள்ளைகளை பெரும்பான்மை மத போதனைகளை பின்பற்ற கட்டாயப்படுத்தும் அரசுகள் ஆகியன உள்ளடங்கும்.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பாக பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பற்றி குறிக்கும் மனித உரிமை ஆவணங்கள் உள்ளடங்கலாக அவை பற்றிய மேலதிகத் தகவல்களை நீங்கள் இணையத்தளத்தில் உள்ள பயிற்சி ஆவணங்களில் காணலாம்.

Copyright: SMC 2018